ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2155/19 - 2019 දෙසැම්බර් මස 27 වැනි සිකුරාදා - 2019.12.27

*2155/19 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**மதுவரிக் கட்டளைச் சட்டம்**

*10/ 2019 ஆம் இலக்க மதுவரி அறிவித்தல்*

**இயல்பு மாற்றப்படாத, பாவனை மற்றும் விற்பனைக்கான போத்தலில் அடைக்கப்பட்ட மதுபான ஏற்றுமதி**

*காலத்திற்குக் காலம் திருத்தியமைக்கப்பட்டவாறான மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் (52 ஆம் அத்தியாயம் ஆகிய) 22 ஆம் பிரிவில் (1) (அ) ஆம் உப பிரிவின் கீழ், நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர் மஹிந்த ராஜபக்ஷ ஆகிய நான், பின்வரும் கட்டளையைப் பிரகடனப்படுத்துகின்றேன்.*

**மஹிந்த ராஜபக்ஷ,**
*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சர்.*

*நிதி, பொருளாதாரம் மற்றும் கொள்கை அபிவிருத்தி அமைச்சு,*
*கொழும்பு 01,*
*2019, திசெம்பர் 26.*

1A - PG 4843— 592 (2020/01)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**கட்டளை**

*மதுவரிக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவின் கீழ், மதுவரி ஆணையாளர் நாயகத்தினால் வெளியிடப்பட்ட அனுமதிப்பத்திரம் ஒன்றின் ஊடாக இயல்பு மாற்றம் செய்யப்படாத அல்லது பாவனை, விற்பனைக்கான போத்தலில் அடைக்கப்பட்ட மதுபான ஏற்றுமதியின் பொருட்டு, மதுவரிக் கட்டணம் ஒன்று செலுத்தப்படுமிடத்து அல்லது தீர்வையற்ற அடிப்படையில் குறித்த மதுபான ஏற்றுமதிக்காக பிணை ஒன்றை அல்லது வங்கி உத்தரவாதம் ஒன்றைச் சமர்ப்பிக்குமிடத்து அனுமதியளிக்கப்படுமெனவும், குறித்த பிணை அல்லது வங்கி உத்தரவாதம் மதுவரி ஆணையாளர் நாயகத்தால் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருத்தல் வேண்டுமெனவும் இத்தால் பிரகடனப்படுத்தப்படுகிறது.*

*இவ்வறிவித்தலின் நோக்கத்திற்காக இயல்பு மாற்றம் செய்யப்படாத அல்லது பாவனைக்கான விற்பனைக்காக போத்தலில் அடைக்கப்பட்ட மதுபான ஏற்றுமதியாளர்கள் மதுவரி உரிமப்பத்திரதாரர்களாக கருதப்படும் அதே சமயம், அவர்களுக்கு உற்பத்தியாளர்களிடமிருந்து அல்லது மொத்த விற்பனையாளர்களிடமிருந்து ஏற்றுமதிக்காக அவர்களது மேற்குறித்த வகையைச் சார்ந்த மதுபானத்தை கொள்வனவு செய்ய அனுமதியளிக்கப்படும். ஏற்றுமதியாளர்கள் தீர்வை விலக்களிப்பிற்கு உரிமை பெறுவதற்கு இயல்பு மாற்றம் செய்யப்படாத அல்லது பாவனைக்கான விற்பனைக்கான போத்தலில் அடைக்கப்பட்ட மதுபான எற்றுமதியில் இருந்து 30 நாட்களுக்குள் இங்கு அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள அனைத்து ஆவணங்களையும் மதுவரி ஆணையாளர் நாயகம் திருப்தியுறும் வண்ணம் சமர்ப்பித்தல் வேண்டும். நேரடியல்லாத ஏற்றுமதியாளர்கள் தொடர்பாக மாத்திரம் குறித்த ஆவணங்களை சமர்ப்பிப்பதற்கான கால எல்லை அறுபது (60) நாட்கள் ஆகும். இவ்வாறு ஆவணங்களை சமர்ப்பிக்கத் தவறுமிடத்து ஏற்றுமதியாளர்கள், அவர்களுக்கு விதிக்கப்படும் அபராதத் தொகைக்கு மேலதிகமாக, நடைமுறையிலுள்ள வரி வீதங்களுக்கு இணங்க மதுவரியைச் செலுத்துதல் வேண்டும்.*

*2011 , யூன் மாதம் 21 ஆந் திகதிய 1711/8 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 937 ஆம் இலக்க மதுவரிக் கட்டளை இத்தால் இரத்துச் செய்யப்படுகிறது.*

*இக்கட்டளை 2019 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 27 ஆந் திகதி முதல் செயல்வலுப் பெறுதல் வேண்டும்.*

**அட்டவணை**

1. *ஏற்றுமதி செய்யப்பட்ட இயல்பு மாற்றம் செய்யப்படாத அல்லது பாவனைக்கான விற்பனைக்காக போத்தலில் அடைக்கப்பட்ட மதுபானங்களுக்கான விலைப்பட்டியல்.*

2. *வார்நாமம் அல்லது விமான வழிச் சீட்டு, எவ்வாறாயினும், எந்தவொரு நேரடியல்லாத ஏற்றுமதியாளருக்கும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபான வழங்கலின் போது, குறித்த ஏற்றுமதியாளர், இலங்கையில் நடாத்தப்படும் எந்தவொரு சர்வதேச விமானச் சேவைக்கும் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட மதுபானங்களை வழங்கும் போது, வார்நாமம் அல்லது விமான வழிச் சீட்டுக்குப் பதிலாக இங்கு 01 ஆம் பின்னிணைப்பில் குறிப்பிட்டுள்ளவாறு பொருட் பெறுகைக் குறிப்புப் பத்திரத்தை ஏற்றுக் கொள்ளல் வேண்டும்.*

3. *சுங்க ஏற்றுமதிப் பத்திரம்.*

*பின்னிணைப்பு 01*

பொருட் பெறுகைக் குறிப்பு (GRN)

<table>
<tr><td colspan="2">நேரடியல்லாத ஏற்றுமதியாளரின் பெயர்</td><td colspan="2">அனுமதி இலக்கம்</td><td colspan="3">GRN இலக்கம்</td></tr>
<tr><td colspan="2">இறுதி ஏற்றுமதியாளரின் பெயரும் முகவரியும்</td><td colspan="5">வேறு விடயங்கள் :<br>மூலப் பொருட்களின் பாவனை மற்றும் தீர்வை வரியின் பெறுமதி மற்றும் அறவிடப்பட வேண்டிய ஏனைய வரிகள்</td></tr>
<tr><td colspan="2">உற்பத்திச் செலவுடன் பொருட்களின் விபரம்</td><td>இ. மு. குறியீட்டு இலக்கம்</td><td>அலகு நிகர லீற்றர்</td><td>தொகை நிகர லீற்றர்/ அலகு</td><td>விலை ரூ.</td><td>உற்பத்தி வரி</td></tr>
<tr><td>1.<br>2.<br>3.<br>4.<br>5.</td><td></td><td></td><td>மொத்தம்</td><td></td><td></td><td></td></tr>
<tr><td colspan="2">அலகு</td><td>தொகை</td><td colspan="2">பிணைமுறி/TIEP/அங்கீகாரம்</td><td colspan="2"></td></tr>
<tr><td></td><td></td><td></td><td colspan="2">எமது ................................. அமைந்துள்ள தொழிற்சாலை/பிணைக்குதத்திற்காக ........... ஆந் திகதி GRN இல் குறிப்பிடப்பட்டுள்ள உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டத்தை கொள்வனவு செய்ததாகவும் அது எமக்கு கிடைக்கப்பெற்றுள்ளதாகவும், ................. (நேரடி ஏற்றுமதியாளரின் பெயர்) உறுதிப்படுத்துகின்றோம். இவ் உள்நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பண்டம் முற்றாக ஏற்றுமதிக்காக மாத்திரமே ஈடுபடுத்தப்படும். தொகை உரியவாறு சுங்கத்திற்கு வரவு வைத்துள்ளதாக/உரிய விபரங்களுடன் .......................... *(திகதி)யில் அல்லது அதற்கு முன்னர் வங்கி உத்தரவாதத்தைப் பதிவு செய்யவும் இதனூடாக அதிகாரமளிக்கப்படுகிறது. இத்துடன் வழங்கப்படும் பண்டங்கள் தொடர்பாக தீர்வை வரியை மீளச் செலுத்துவதற்காக கோரப்பட மாட்டாது.</td><td colspan="2"></td></tr>
<tr><td colspan="3">மேற்படி பண்டங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன.</td><td colspan="2">மதுவரித் திணைக்களம்</td><td>இலங்கை சுங்கத்தின் சபை ஒருங்கிணைப்புப் பிரிவு</td><td>இலங்கை முதலீட்டுச் சபை</td></tr>
<tr><td colspan="3">நிறுவனத்தின் பெயர் :.........................<br>பதவி :....................... பெயர் :.............<br>கையொப்பம் :.............. திகதி :.............</td><td colspan="2">அதிகாரம்பெற்ற அலுவலரின் கையொப்பம் :.................<br>பதவி :.....................<br>கையொப்பம் :...........<br>திகதி :.................</td><td>அதிகாரம் பெற்ற அலுவலரின்<br><br>பெயர் :...........<br>பதவி :............<br>கையொப்பம் :<br>திகதி :.............</td><td>அதிகாரம் பெற்ற அலுவலரின்<br><br>பெயர் :..........<br>பதவி : ..........<br>கையொப்பம் :<br>திகதி :...........</td></tr>
</table>

தடித்த கூடு இறுதி ஏற்றுமதியாளருக்கானது.

* குறித்த திகதியில் இருந்து 30 நாட்களுக்கு மேற்படாமை.

*01-673*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.